DEPOSITION OF WITNESS

(Chapter XXIII Code of Criminal Procedure)
IN THE COURT OF DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE NO.I, USILAMPATTI.

Calendar

Miscellaneous Preliminary Register

CASE No: C.C. No. 208/15

Sessions

| | | |
|---|---|---|
| Deposition of witness of | : | P W -1 |
| Name | : | Ponmudiyan |
| Father's Name | : | |
| Village | : | |
| Taluk | : | |
| Caste | : | |
| Calling | : | |
| Religion | : | |
| Age | : | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 28.01.19

முதல் விசாரணை:

நான் மூப்பபட்டியில் குடியிருந்து வருகிறேன். கடந்த 4 வருடங்களுக்கு முன்பாக அடையாளம் தெரியாத நபர்கள் என்னிடம் தகராறு செய்ததன் காரணமாக எதிரிகள் மீது சந்தேகத்தின்பேரில் நடவடிக்கை எடுக்கக் கோரி புகார் அளித்துவிட்டேன். அந்த புகார் அதசாஆ 1. எதிரிகள் எனது உறவினர்கள் தான். தற்போது நானும் எதிரிகளும் சமாதானம் செய்து கொண்டு சமாதான மனு தாக்கல் செய்துள்ளேன். போலிசார் என்னை விசாரித்தார்கள்.

அனுமதியின்பேரில் அரசுதரப்பு குறுக்குவிசாரணை.

கடந்த 9.4.2015ம் தேதி காலை 7.00 மணி அளவில் எனது மனைவி, தண்ணீர் பிடித்துக் கொண்டிருந்தபோது 1வது எதிரி அவரது வீட்டிற்கு தண்ணீர் வரவில்லை என்று சொல்லி தண்ணீர் குழாயை பிடுங்கியதால் நான் ஏன் என்று கேட்டதற்கு என்னை அசிங்கமாக பேசி 1வது எதிரி இரும்பு கம்பியால் எனது உச்சந்தலையில் அடித்து சாதாரண காயத்தையும் 2வது எதிரி கல்லால் எனது முதுகில் குத்தி சாதாரண காயத்தையும் 3வது எதிரி கம்பால் எனது முதுகில் அடித்து சாதாரண காயத்தை ஏற்படுத்தியதாகவும் எதிரிகள் மூவரும் எனக்கு ஆயுதங்களைக் காட்டி

கொலை மிரட்டல் விடுத்ததாகவும் அவர்கள் மீது நடவடிக்கை எடுக்கக் கோரி புகார் மனு அளித்துவிட்டு தற்போது எதிரிகள் எனது உறவினர்கள் என்பதாலும் அவர்களுடன்சமாதானமாகிவிட்ட காரணத்தினாலும் அவர்களுக்கு ஆதரவாக பொய்சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

கு.வி. எதிரிகள் தரப்பில் இல்லை என தெரிவிக்கப்பட்டது.

/Sd./ Ponmudiyan
Taken down by me in open court
Read over to the witness in the
presence of accused and admitted
by HIM correct.
/Sd./ M. Udhayavelavan,
District Munsif cum Judicial Magistrate No.I,
Usilampatti.

DEPOSITION OF WITNESS

(Chapter XXIII Code of Criminal Procedure)
IN THE COURT OF DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE NO.I, USILAMPATTI.

Calendar

Miscellaneous CASE No: C.C. No. 151/18
Preliminary Register

Sessions

Deposition of witness of : P W -5

Name : Ochathevar
Father's Name :
Village :
Taluk :
Caste :
Calling :
Religion :
Age :

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 28.01.19

முதல் விசாரணை:

நான் பாப்பாபட்டியில் குடியிருந்து வருகிறேன். சாட்சி செல்லப்பாண்டி, தங்கப்பாண்டி, வெள்ளைச்சாமி மற்றொரு செல்லப்பாண்டி த-பெ. தவமணித்தேவர் ஆகியோரைத் தெரியும். 27.11.2018ம் தேதி காலை 6.30 மணி அளவில் பாப்பாபட்டியில் இருந்து உசிலம்பட்டிக்கு பேருந்தில் வந்து பேருந்து நிலையத்தில் இறங்கினேன். அங்கு சாட்சி செல்லப்பாண்டி பணம் போய் விட்டது என்று கதறிக் கொண்டிருந்தார். பேருந்தில் ஏறும்போது மஞ்சள் பையில் வைத்திருந்த ரூ 90 ஆயிரத்தை யாரோ எடுத்துவிட்டார் என்று கூறினார். அவர் ஒல்லியான சிவப்பு நிறமுடைய ஒரு நபர் பணத்தை எடுத்துச் சென்றுவிட்டதாக கூறினார். அதுசம்பந்தமாக சாட்சி செல்லப்பாண்டி புகார் கொடுத்தார். பேருந்து நிலையத்தில் சம்பவத்தின்போது மற்ற சாட்சிகளும் உடனிருந்தார்கள். போலிசார் என்னை விசாரித்தார்கள்.

கு.வி.

தவமணித்தேவர் மகன் செல்லப்பாண்டி எந்த ஊரைச் சார்ந்தவர் என்று எனக்கு தெரியாது. நான் முதல்விசாரணையில் கூறிய விபரங்கள் அனைத்தும் அசா1 சொல்லித்தான் தெரியும் என்றால் சரிதான். எனக்கு நேரடியாகத் தெரியாது.

சம்பவத்தன்றே போலிசார் என்னை தேனி ரோட்டில் முருகன் கோவில் அருகில் டீக்குடித்துக் கொண்டிருந்தபோது விசாரித்தார்கள். சம்பவம் சம்பந்தமாக எனக்கு எதுவும் தெரியாது என்றும் அசா1 கேட்டுக் கொண்டதற்கிணங்க பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. நான் முதல்விசாரணையில் கூறியதுபோன்றுதான் போலிசார் விசாரணையிலும் கூறியுள்ளேன்.

ம.வி.இல்லை.

/Sd./Ochathevar

Taken down by me in open court
Read over to the witness in the
presence of accused and admitted
by HIM correct.

/Sd./ M. Udhayavelavan,
District Munsif cum Judicial Magistrate No.I,
Usilampatti.